DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 168/2024**

**Deposition of LW1 examined as PW1** Dt. 23.02.2026

| | |
|---|---|
| Name | தேவன் |
| Father's/Husband's Name | தங்கவேல் |
| Village | தென்நச்சினார்குடி |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 27/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 23.02.2026

( Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு 7.00 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த போது என்னை தகாத வார்த்தைகளில் திட்டி கையாலும், கட்டையாலும் அடித்து காயத்தை ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார். இரவு நேரம் என்பதால் தாக்கியவர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. ஆஜர் எதிரி அந்த சமயத்தில் அங்கு இல்லை. ஆஜர் எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததால் மருத்துவமனையில் போலீசாரிடம் எதிரிதான் திட்டி தாக்கி இருப்பார் என்று எண்ணி அவர் மீது புகார்வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜரில் உள்ள எதிரி எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர். ஆஜர் எதிரியோடு தற்போது நான் சமாதனமாகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். புகாரை நான் எழுதவில்லை போலீசார் எழுதினார்கள். அதில் உள்ள சங்கதி பற்றி எனக்கு தெரியாது. கடந்த 19.12.2022 ம் தேதி இரவு 7.30 மணியளவில் எனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளில் திட்டியதாகவும், கையாலும், கட்டையாலும் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் நடவடிக்கை எடுக்க

23/2/26

புகார்வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

M. [signature] 23/2/26

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை